முதன்மை சார்பு நீதிமன்றம், திருச்செங்கோடு, நாமக்கல் மாவட்டம்.

2026–ம் ஆண்டு **ஜீன்** மாதம் 03–ம் தேதி பிரதிவாதி தரப்பு சாட்சி பி.வா.சா.2–ன் வாக்குமூலம் 1989ம் ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படி எம்.ராமச்சந்திரன்,பி.காம்.,பி.எல்., என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

**அ.வ.எண்.91/2022**

**பி.வா.சா:–2 (குப்புசாமி)**

**குறுக்கு விசாரணை (வாதி தரப்பில்):–**

எனக்கு சாட்சி சொல்வதற்கு நீதிமன்றத்திலிருந்து சம்மன் எதுவும் வரவில்லையென்றால் சரிதான். சாட்சி சொல்ல என்னை யார் அழைத்தார்கள் என்றால் அங்கப்பன் அழைத்தார். வாதிகளுக்கு நடைபெற்ற திருமணத்தில் நான் கலந்துகொள்ளவில்லையென்றால் சரிதான். வாதிகள் இந்த வழக்கை எப்போது தாக்கல் செய்தார்கள் என்ற விவரம் எப்போது தெரிந்துகொண்டேன் என்றால் சுமார் 4 வருடத்திற்கு முன்பாக நான் போனபோது பிரச்சினை செய்துகொண்டிருந்தார்கள் நான் பத்திரத்தை வாங்கி படித்து பார்த்தேன். இருதரப்பினருக்கும் பிரச்சினை வேண்டாமென்று சொல்லி வாதிகளிடம் செலவுக்கு ஏதாவது வாங்கி கொண்டு செல்லுங்கள் என்று கூறினேன். மேற்படி சங்கதிகளை பற்றி எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லையென்றால் சரிதான். வாதிகள் எத்தனை பங்கு கேட்டு வழக்கு போட்டுள்ளார்கள் என்று தெரியுமா என்றால் முழுமையாக தெரியாது அரைகுறையாக தான் தெரியும். வழக்கு சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு சொத்தில் என்ன உள்ளது என்று தெரியுமா என்றால் தெரியாது. வாதி மற்றும் பிரதிவாதியின் தகப்பனார் சின்னதம்பி எனக்கு நன்றாக தெரியுமென்று கூறியுள்ளேன் என்றும், அவர் எனக்கு உறவினரா என்றால் இல்லை. 29.08.1979 தேதியில் சின்னதம்பி சுயமாக கிரயம் வாங்கிய சொத்து என்று பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளேன் என்றும், அந்த கிரய பத்திரத்தில் நான் சாட்சி கையெழுத்து போட்டுள்ளேனா என்றால் இல்லை. சின்னதம்பி மேற்படி சொத்தை வாங்குவதற்குண்டான கிரய தொகையை எவ்வாறு ஏற்பாடு செய்தார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 29.08.1979 தேதியிட்ட கிரய ஆவணத்தை நான் படித்து பார்த்துள்ளேன். எப்போது படித்து பார்த்துள்ளேன் என்றால் 4 வருடத்திற்கு

முன்பாக இருதரப்பினருக்கும் பிரச்சினை வந்தபோது படித்துபார்த்தேன். என்னுடைய பிரமாண வாக்கு மூலத்தில் 23.09.1981 தேதியிட்ட விடுதலை பத்திரத்தில் நான் சாட்சி கையெழுத்து போட்டுள்ளேனா என்றால் இல்லை. 3ம் பிரதிவாதி தாவா சொத்தில் குடியிருக்கவில்லையென்றும், வேறு இடத்தில் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். விஜயா என்பவர் சின்னதம்பிக்கு எழுதிக்கொடுத்த விடுதலை பத்திரத்தை படித்து பார்த்துள்ளேனா என்றால் படித்து பார்த்துள்ளேன். விஜயா என்பவர் சின்னதம்பியுடன் வாழாமல் வேறு ஒருவருடன் வாழ்ந்து வருகிறார் என்று எனது பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளேன் என்றும், அந்த வேறொரு நபர் யாரென்று குறிப்பிடவில்லையென்றால் சரிதான். சுமார் 8 வருடத்திற்கு முன்பாக சின்னதம்பி என்பவருக்கு உடல்நலக்குறைவு ஏற்பட்டு ஈரோடு சுதா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார் என்ற விவரம் தெரியுமா என்றால் அது போல் மருத்துவமனையில் அனுமதிக்கப்படவில்லை. சுமார் 8 வருடத்திற்கு முன்பாக சின்னதம்பி என்பவர் உடல்நலக்குறைவு ஏற்பட்டு ஈரோடு சுதா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார் என்றும், வாதி, பிரதிவாதிகள் குடும்பத்தை பற்றி எனக்கு தெரிந்திருந்தால் மேற்படி விவரமும் எனக்கு தெரிந்திருக்குமென்றால் சரியல்ல. சின்னதம்பி என்பவர் இறக்கும் வரை நல்ல மனநிலையில் தான் இருந்துவந்தார் என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. சின்னதம்பி இறந்த பிறகு வருட நிகழ்வில் நான் கலந்துகொண்டேனா என்றால் இல்லை. சின்னதம்பியின் வருட நிகழ்வில் சாமி கும்பிட்டபோது வாதிகள் பாகம் கேட்டு பிரச்சினை செய்தபோது ஆவணங்களை எல்லாம் வாங்கி படித்து பார்த்ததாக வழக்கிற்காக வேண்டி பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. சின்னதம்பிக்கு பூர்வீகம் நங்கவள்ளி என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதிகளின் தாயாரின் சொந்த ஊர் சௌரியூர் என்றால் தெரியாது. எனக்கு பூர்வீகம் சௌரியூர் என்றால் சரியல்ல. சேலம் ஆகும். வளர்ந்தது தான் சௌரியூர் ஆகும். திலகா சௌரியூரை சேர்ந்தவர் என்றும், நானும் சௌரியூரை சேர்ந்தவர் என்பதால் திலகா கேட்டுக்கொண்டதின் பேரில் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. சின்னதம்பியுடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. 1 முதல் 3 பிரதிவாதிகள் பெயருக்கு எப்போது பட்டா

வாங்கினார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. அந்த பட்டாவை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்ததில்லை. பட்டா பெயர் மாற்றம் மின்னிணைப்பு பெயர் மாற்றம் ஆகியவற்றை கணினி வழியாக மாற்றியுள்ளார்கள் என்றும், எப்போது மாற்றினார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்தை பிரதிவாதிகள் மட்டும் தான் அனுபவித்து வருவதாகவும், வாதிகள் ஒருபோதும் அனுபவித்து வரவில்லையென்றும், சொல்லியுள்ள சங்கதியானது பொய்யானது என்றும் என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள அனைத்து சங்கதிகளும் பொய்யானது என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

Sd/-M.Ramachandran

| |
|---|
| Taken down before / by me in the open court and read over / interpreted to the witness and acknolwedged by him / her to be correct. |
| Sd/.M.Ramachandran,<br>Principal Subordinate Judge, Tiruchengode. |